


ஆற்காடு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா 2025 போட்டியினை அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கி வைத்து மாணாக்கர்களின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நகரமன்ற தலைவர் தேவி, பவளக்கொடி சரவணன், புவனேஸ்வரி சத்தியநாதன், ஏ.வி.சரவணன், சொக்கலிங்கம், ஏ.ஜி.ரவி, ருக்மணி, விஜயகுமார், பாவை பழனி, பென்ஸ் பாண்டியன், ஆர்.கோட்டி, ஆனந்தன் துரை மற்றும் அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (28.10.2025) கோடம்பாக்கம் பத்மராம் திருமண மண்டபத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 10, 11 மற்றும் 13 ஆகிய மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிவாரணப் பணிகள் மற்றும் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம்.க.கணபதி, மயிலை த.வேலு, அசன்மௌலானா, ஜெ.கருணாநிதி, பிரபாகர் ராஜா, கண்காணிப்பு அலுவலர்கள் சிவஞானம், விசாகன், சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையர்கள் எச்.ஆர்.கௌசிக், அஃதாப் ரசூல், நிலைக்குழுத் தலைவர் தனசேகரன், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், நொளம்பூர் ராஜன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், முக்கிய சேவை துறைகள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பள்ளிக்கரணை ஈரநிலை விவகாரம்: செய்தித்தாளில் வந்த

# குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை!

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் விளக்கம்!

சென்னை, அக்.29-

சுற்றுசூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையில் செய்தி வெளியீடு வருமாறு:-

சென்னை பள்ளிக்கரணை காப்புக்காடு ராம்சார் தலத்திற்குள், ஒரு அடுக்கு மாடி கட்டிடத் திட்டத்திற்கு, சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இது குறித்து கீழ்க் கண்ட தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

1971 ஆம் ஆண்டு ஈரநிலங்கள் தொடர்பான மாநாட்டின் கீழ் நிறுவப்பட்ட ராம்சார் தல, சட்ட செயல்முறையின் படி, 2017 ஆம் ஆண்டு ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகளின் கீழ் (i) சதுப்பு நிலம் /காப்பு காடு, (ii) ராம்சார் தலம் மற்றும் (iii) ஈரநிலம் ஆகியவை மூன்று தனித்தனி மற்றும் வேறுபட்ட வகைப்பாடுகள் "சதுப்பு நிலம்" என்று அறிவிக்கப்படும்.

தமிழ்நாடு வனச்சட்டம், 1882 இன் கீழ் பள்ளிக்கரணை பகுதியில், சுமார் 698 ஹெக்டேர் பரப்பளவு, பள்ளிக்கரணை சதுப்பு நிலக் காப்புக் காடாக 2007 ஆம் அறிவிக்கப்பட்டது. இந்த இடத்தில எவ்விதமான கட்டுமானங்களுக்கும் அனுமதி அளிக்கப்படுவதில்லை. இது வனத்துறைக்கு சொந்தமான பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.

ராம்சார் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள 1248 ஹெக். பரப்பளவில், பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக்காட்டில் உள்ள 698 ஹெக். நிலமும், உரிய நடைமுறைகளுக்குப் பின்பு வரையறுக்கப்படவுள்ள 550 ஹெக். கூடுதல் நிலமும் அடங்கும். ஈர நில விதிகளின்படி பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக்காடுகளுக்கு வெளியில் உள்ள நிலப்பகுதிகளை சர்வே எண்களுடன் கண்டறிந்து வரையறுப்பதற்கான நில உண்மை கண்டறிதல் (Ground Truthing) இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஊடகங்களில் குறிப்பிடப்படும் கட்டுமானம் குறித்த நிலத்தின் புல எண்கள் வருவாய்த்துறை ஆவணங்களின்படி இத்தகைய தனியார் பட்டா நிலங்கள் ஆகும்.

இப்பணிகளை, ஒன்றிய அரசாங்க நிறுவனமான, தேசிய நிலையான கடற்கரை மேலாண்மை மையம் (NCSCM) தேர்வு செய்யப்பட்டு, குறிப்பிட்ட சர்வே எண்களுடன் எல்லைகளை வரையறுக்கும் பணி நவம்பர் 2024ல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, தேசிய நிலையான கடற்கரை மேலாண்மை மையம் (NCSCM), பள்ளிக்கரணை காப்புக்காடு ராம்சார் தலத்திற்கான ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தை (IMP) தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இம்மேலாண்மைத் திட்டமானது, சர்வே எண்களின் அடிப்படையில் எல்லைகளை வரையறுத்தல், டிஜிட்டல் வரைபடத்தில் நிலப் பயன்பாடு, ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017 இன் விதி 7 மற்றும் ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017, அத்தியாயம் XIII, பத்தி 62 இன் கீழ் அனுமதிக்கப்பட வேண்டிய அல்லது ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய செயல்பாடுகளின் பட்டியலை தயாரித்தல் (அனைத்து சம்பந்தப்பட்ட நபர்கள் பங்கேற்புடன்) உள்ளடக்கியது.

ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017, அத்தியாயம் XIII, 66 ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களின் படி.,பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"All Ramsar Sites, deemed covered under these Rules, shall also be notified as per the process laid out in paragraphs 57-64. This is proposed to ensure that the site boundaries are properly delineated and that knowledge about the same is available in the public domain. It is advised that the information in the 'Brief Document' may be consistent with the Ramsar Site Information Sheet (RSIS) submitted to the Ramsar Convention during site designation or updated thereafter."

இதன்படி, ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலில் மேலே உள்ள பத்தி 66 இன் படி, ராம்சார் தலத்தை அறிவிக்கும் செயல்முறை, ராம்சார் தலத்திற்குள் உள்ள சர்வே எண்கள் உட்பட வரைபடம் மற்றும் திட்டத்தை பொது களத்தில் வைப்பதாகும் என்பது தெளிவாகிறது. மேலும், பத்தி 63 இன் படி ராம்சார் தலமாக அறிவிக்கும் செயல் முறையின் ஒரு பகுதியாக, இதனை 60 நாட்களுக்குள் ஒரு பொது ஆலோசனைக்கு உட்படுத்துவது என்ற செயல்முறையும் வரையறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பத்தி 64 ல், குறிப்பிட்டுள்ளவாறு ஆட்சேபனைகள் தெரிவிக்கும் நபர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் அல்லது பரிந்துரைகளை பரிசீலித்து அதனை நிவர்த்தி செய்ய மாநில அரசுக்கு 240 நாள் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, ஈரநில விதிகளின்படி பள்ளிக்கரணை ஈரநில அறிவிப்பு இன்னும் இறுதி செய்யப்படாத நிலையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் பட்டா நிலங்கள் என்பதால், செய்தித்தாள் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை. மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் ராம்சார் தல எல்லை வரையறையானது, குறிப்பிட்ட சர்வே எண்களுடன் ஒப்பிட்டு பரப்பளவை வரையறுப்பது, நில உண்மைகண்டறிதல்" சோதனை மற்றும் அறிவிப்பு ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும். ராம்சர் தலம் அமையும் நிலங்கள் இன்னும் புல எண்களுடன் குறிப்பிடப்பட்டு வரையறுக்கப்படாததால், தற்போதைய பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக்காட்டு எல்லைகளுக்கு வெளியே உள்ள தனியார் பட்டா நிலங்களுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட அலுவலர்களால் ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செங்கோட்டை, நாகர்கோவில் ரயில் உள்பட

# 5 ரயில்களில் பயணிகளின் வசதிக்காக கூடுதல் பெட்டிகள் இணைப்பு!

சென்னை, அக். 29 -

பயணிகளின் வசதிக்காக, தாம்பரத்தில் இருந்து செங்கோட்டை, நாகர்கோவிலுக்கு இயக்கப்படும் விரைவு ரயில்களில் தலா 7 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட உள்ளன. தெற்கு ரயில்வேயில் முக்கிய வழித்தடங்களில் பயணிகளின் தேவைகள் அடிப்படையில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுகின்றன. அந்தவகையில், 5 விரைவு ரயில்களில் தற்காலிகமாக கூடுதல் பெட்டிகள் இணைந்து, இயக்கப்பட உள்ளன.

இதன்படி, தாம்பரம் செங்கோட்டை இடையே இயக்கப்படும் சிலம்பு அதிவிரைவு ரயிலில் தற்காலிகமாக 7 பெட்டிகள் இணைக்கப்பட உள்ளன.

அதாவது, தலா ஒரு ஏசி 2 அடுக்கு மற்றும் இரண்டாம் வகுப்பு பொதுப் பெட்டியும், இரண்டு மூன்றடுக்கு ஏசி பெட்டிகளும், 3 இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளும் என 7 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட உள்ளன. தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும் ரயிலில் நவ.1ம் தேதி முதலும், செங்கோட்டையில் இருந்து இயக்கப்படும் ரயிலில் நவ.2ம் தேதி முதலும் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படவுள்ளன.

தாம்பரம் நாகர்கோவில் இடையே இயக்கப்படும் விரைவு ரயிலில் தலா ஒரு ஏசி இரண்டடுக்கு மற்றும் ஒரு பொதுப் பெட்டியும், இரண்டு மூன்றடுக்கு ஏசி பெட்டிகளும், 3 இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளும் கூடுதலாக இணைத்து இயக்கப்பட உள்ளன. தாம்பரத்தில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.2ம் தேதி முதலும், நாகர்கோவிலில் இருந்து நவ.3ம் தேதி முதலும் இணைத்து இயக்கப்பட உள்ளன.

சென்னை சென்ட்ரல் திருவனந்தபுரம் சென்ட்ரல் இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரயிலில் ஒரு இரண்டடுக்கு ஏசி பெட்டி இணைத்து இயக்கப்பட உள்ளன. சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.3ம் தேதி முதலும், திருவனந்தபுரம் சென்ட்ரலில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.4ம் தேதி முதலும் இணைக்கப்பட உள்ளன.

இதுதவிர, சென்னை சென்ட்ரல் ஆலப்புழா இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரயில், கோயம்புத்தூர் ராமேசுவரம் இடையே இயக்கப்படும் ரயில் உள்ளிட்ட ரயில்களில் கூடுதல் பெட்டி இணைக்கப்பட உள்ளது.

இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நவ.2 இல் சி.எம்.எஸ்.-03 ராக்கெட் விண்ணில் பாய்கிறது!

சென்னை, அக். 29 –

கடற்படை, ராணுவப் பயன்பாட்டுக்கான சிஎம்எஸ்03 செயற்கைக்கோள், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்3 ராக்கெட் மூலம் நவம்பர் 2ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது. நாட்டில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இது வரை 48 செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்தியுள்ளது.

அதில், கடந்த 2013ம் ஆண்டு செலுத்தப்பட்ட ஜிசாட்7 (ருக்மணி) செயற்கைக்கோளின் ஆயுள்காலம் விரைவில் முடிவடைய உள்ளது. அதற்கு மாற்றாக, சுமார் ரூ.1,600 கோடியில் அதிநவீன சிஎம்எஸ்03 (ஜிசாட்7ஆர்) செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து எல்விஎம்3 (ஜிஎஸ்எல்வி மார்க்3) ராக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் நவம்பர் 2ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

இதற்காக, ராக்கெட் பாகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அதில் விண்கலம் பொருத்தப்பட்டுள்ளது. பின்னர், ஏவுதளத் துக்கு கொண்டு செல்லப்பட்டு தயார் நிலையில் உள்ளது. சிஎம்எஸ்03 செயற்கைக்கோள் 4,400 கிலோ எடை கொண்டது. இதுவரை புவிவட்ட சுற்றுப்பாதைக்கு ஏவப்பட்டதிலேயே இதுதான் அதிக எடை கொண்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோள்.

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் (BLA-2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சங்ககிரி, எடப்பாடி, மேட்டூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA)ஆலோசனைக் கூட்டம் நாளை (30.10.2025 - வியாழக்கிழமை) கீழ்க் கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

1. காலை 9.00 மணி - சங்ககிரி சட்டமன்ற தொகுதி - வாசுதேவ் மஹால், பவானி மெயின் ரோடு, சங்ககிரி.
2. காலை 11.00 மணி - எடப்பாடி சட்டமன்ற தொகுதி- முகில்திருமண மண்டபம், எடப்பாடிசங்ககிரி மெயின்ரோடு, மலையனூர்.
3. மாலை 3.00 மணி - மேட்டூர் சட்டமன்ற தொகுதி - திருமலை மாதவி மஹால், நவப்பட்டி.

இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தேர்தல் பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், தேர்தல் பொறுப்புகுழு உறுப்பினர்கள்,வாக்குச்சாவடிமுகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA) மற்றும் கிளை, வார்டு கழக செயாலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:
1. என் வாக்குச்சாவடி... வெற்றி வாக்குச்சாவடி!குறித்து.
2.SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) குறித்து.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
**செயலாளர்**
**சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.**

### ஆசிய இளையோர் மகளிர் கபடி போட்டி:

# தங்கம் வென்ற செல்வி கார்த்திகாவுக்கு சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.5 இலட்சம்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா காசோலை வழங்கிப் பாராட்டினார்!

சென்னை,அக்.29-

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் மகளிர் கபடி போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்த இந்திய மகளிர் அணியின் துணை கேப்டனும், பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்த திருமதி சரண்யா அவர்களின் மகளுமான செல்வி கார்த்திகா அவர்களைப் பாராட்டி, மாநகராட்சியின் சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (28.10.2025) வழங்கிப் பாராட்டினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி அரசுப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பயின்று வரும் கண்ணகி நகரைச் சேர்ந்த செல்வி கார்த்திகா (வயது 17), பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் மகளிர் கபடி விளையாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி இறுதிப்போட்டியில் ஈரானை 75-21 என்ற புள்ளிக்கணக்கில் வென்று தங்கம் பெற்று சாதனை படைத்தது. இந்திய அணியின் துணை கேப்டனாக இருந்து அணி தங்கம் வெல்ல முக்கிய காரணமாக இருந்து உலக அரங்கில் இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்த்த நமது சென்னையின் கண்ணகி நகரைச் சேர்ந்த செல்வி கார்த்திகா ஆவார். இவரின் அபார ஆட்டத்தால் ஆசிய இளையோர் விளை யாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி தங்கம் வென்றுள்ளது.

செல்வி கார்த்திகாவின் தாயார் சரண்யா சென்னை மாநகராட்சியின் கோடம்பாக்கம் மண்டலத்தில் 29.10.2020 முதல் 01.01.2024 வரை தூய்மைப் பணியில் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தின் ஓட்டுநராகப் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பிறகு சொந்தமாக ஆட்டோ வாங்கி தற்போது ஆட்டோ ஓட்டுநராக பணி புரிந்து வருகிறார். செல்வி கார்த்திகாவின் இந்த வளர்ச்சிக்கு அவர்களின் குடும்பத்தினரின் பங்கு அளப்பரியது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செல்வி கார்த்திகாவின் வெற்றியை பாராட்டி அவரை ஊக்குவிக்கும் விதமாக, ரூ.25 இலட்சம் பரிசுத்தொகை வழங்கிப் பாராட்டினார்கள். இதனைத் தொடர்ந்து செல்வி. கார்த்திகாவின் வெற்றியைப் பாராட்டி அவரைச் சிறப்பிக்கும் விதமாகவும், மேயர் அவர்கள் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையினை வழங்கி, பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, கபடி வீராங்கனை செல்வி கார்த்திகாவின் குடும்பத்தினர், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர் ஜி.கே. ராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மேயர் திருமதி ஆர்.பிரியா, பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் மகளிர் கபடி போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்த இந்திய மகளிர் அணியின் துணை கேப்டனும், பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்த திருமதி சரண்யா அவர்களின் மகளுமான செல்வி கார்த்திக அவர்களைப் பாராட்டி, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் வழங்கிப் பாராட்டினார். இந்நிகழ்ச்சியில், ஜெ.குமரகுருபரன், வீ.ப.ஜெயசீலன், டாக்டர் கோ. சாந்தகுமாரி, கபடி வீராங்கனை செல்வி கார்த்திகாவின் குடும்பத்தினர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கெங்கவரம் ஊராட்சியில் 1.45கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார மருத்துவமனை கட்டிடம் கட்டுவதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம். எல். ஏ. அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயக்குமார், துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா, ஒன்றிய கவுன்சிலர் சத்யா கார்த்திகேயன் ,ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி பொற்செழியன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.